அசல் வழக்கு எண். **13/2016**
**P.W. 1 கோமதி**
**நாள் 18.08.2023**

<u>குறுக்கு விசாரணை (பிரதிவாதி தரப்பில்)</u>

சாட்சி அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

சோமசுந்தரம் எனது தந்தை வழி பாட்டனார் என்றால் சரிதான். ஜெகதாம்பாள் தந்தை வழி பாட்டியார் என்றால் சரிதான். சோமசுந்தரம், ஜகதாம்பாளுக்கு எனது தந்தை நடராஜன், 1 முதல் 5 பிரதிவாதிகள், மாசிலாமணி, ஆறுமுகம், பார்வதி ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். ஆறுமுகத்துக்கு திருமணம் ஆகாமலேயே இறந்துவிட்டார் என்றால் சரிதான். இறந்துபோன மாசிலாமணியின் வாரிசுகள் தான் 7 முதல் 9 பிரதிவாதிகள் என்றால் சரிதான். கிருஷ்ணமூர்த்தி என்பவர் வழக்கு நிலுவையில் இருக்கும் போது இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தந்தை 03.10.1987-ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். எனது தாயார் பெயர் இந்திரா என்றால் சரிதான். எனது அப்பா இறக்கும்போது, நான், இந்திரா, எனது பாட்டி ஜெகதாம்பாள் ஆகியோர் வாரிசுகள் என்றால் சரிதான். எனது பாட்டனார் சோமசுந்தர கவுண்டர் 30.11.1991-ம் ஆண்டு இறந்துவிட்டார் என்றால் சரிதான். சோமசுந்தர கவுண்டருக்கு நான், எனது தாயார் இந்திரா இருவரும் வாரிசுகளாக வரகூடியவர்கள் என்ற விவரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். 1 முதல் 29 ஐட்ட சொத்துக்கள் சோமசுந்தர கவுண்டருக்கு சொந்தம் என்றும், 30 முதல் 32 ஐட்ட சொத்துக்கள் ஜெகதாம்பாளுக்கு சொந்தம் என்று வழக்குரையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். சோமசுந்தர கவுண்டருக்கு தாவா சொத்துக்கள் எப்படி வந்தது என்பது பற்றி எனக்கு தெரியாது. சோமசுந்தர கவுண்டர் பெயரில் 1 முதல் 29 ஐட்ட சொத்துக்களுக்கு

அவரிடம் கிரய பத்திரமோ, செட்டில்மெண்ட் பத்திரமோ, பாகபத்திரமோ உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. மேற்கண்டிபடியான ஆவணங்கள் எதையும் நான் இந்த வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். சோமசுந்தர கவுண்டர் காலமான பிறகு எனது தாயார் இந்திராவை 2ம் பிரதிவாதி வடமலை 23.09.1993-ம் தேதி திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். அவருக்கு 2-ம் திருமணத்தின் மூலம் 4 பெண் குழந்தைகள் உள்ளனர். கத்திரிபுலத்தில் உள்ள 1 முதல் 12 ஐட்ட சொத்துக்கள் சோமசுந்தர கவுண்டர் பேரில் உள்ளது என்றால் சரிதான். 13 முதல் 21 ஐட்ட சொத்துக்களும் கத்திரிபுலத்தில் இருக்கிறது என்றால் சரிதான். 13 முதல் 21 ஐட்ட சொத்துக்கள் 1-ம் பிரதிவாதி தனராஜன் பெயருக்கு கிரயம் வாங்கப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். 13 முதல் 21 ஐட்ட சொத்துக்களுக்கு கிரய பத்திரம் ஏதும் வாங்கி பார்த்தேனா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 22 முதல் 29 ஐட்ட சொத்துக்கள் சோமசுந்தர கவுண்டர் பெயரில் உள்ளது என்றால் சரிதான். 19-வது ஐட்ட சொத்தில் ஒரு மாடி வீட்டை 1ம் பிரதிவாதி தனராஜன் கட்டியுள்ளார் என்றால் சரிதான். அந்த வீட்டுக்கு வீட்டு வரி அனைத்தும் தனராஜன் பெயரில் தான் உள்ளது என்றால் சரிதான். 13 முதல் 21 ஐட்ட சொத்துக்கள் என்பது 1-ம் பிரதிவாதிக்கு சொந்தமான தனிப்பட்ட சுயஆர்ஜிதமாக வாங்கப்பட்ட சொத்துக்கள், அந்த சொத்துக்களை தவறான வழியில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. 25 முதல் 28 ஐட்ட சொத்துக்கள் விஸ்தீரணங்கள் என்றாலும், வழக்குரையில் அதை தவறாக சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. இந்த சொத்துக்களை பொறுத்து முரண்பாடாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. பல தனி நபர்கள் பெயரில் கூட்டுபட்டாவில் உள்ள சொத்துக்களையும் தவறாக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் சரியல்ல. சோமசுந்தர கவுண்டருக்கு பாத்தியப்பட்ட சொத்துக்களில் நடராஜன்

வாரிசு என்ற அடிப்படையில் எனது தாயார் இந்திரா அவர்களுக்கும், சமபாக வீதம் உள்ளது என்றால் அவருக்கு பாக வீதம் இருந்தது, எனது சிறிய தகப்பனாரை திருமணம் செய்ததால் அவருக்கு வீதம் இல்லாமல் போய்விட்டது. என்னுடைய தாயார் இந்திரா அவர்கள் மறுமணம் செய்ததால் மட்டுமே அவருக்கு கிடைக்ககூடிய பாகவீதம் சட்டப்படி இல்லையென்று நான் சொல்ல இயலாது என்றால் சரியல்ல. ஜெகதாம்பாளுக்கு சொந்தமான சொத்துக்கள், அவரது கணவர் மற்றும் மகனின் வாரிசுரிமையில் கிடைத்த சொத்துக்கள் பொறுத்து 30.06.1993-ல் ஒரு உயில் பத்திரம் எழுதி வைத்துள்ளார் என்றும், அந்த உயில் பத்திரப்படி 1, 2 பிரதிவாதிகள் மாசிலாமணி, கிருஷ்ணமூர்த்தி சொத்துக்களை அடைந்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. ஆறுமுகத்துக்கு கிடைக்ககூடிய பாகமானது அவரது சகோதர, சகோதரிகளுக்கு தான் போகும், எனக்கு கிடைக்ககூடியதல்ல என்றால் சரியல்ல. தாவா 31-வது ஐட்ட சொத்தில் 2ம் பிரதிவாதி வடமலை ஒரு மாடு வீடு கட்டி அது முற்றுபெறாமல் உள்ளது என்றால் சரிதான். அந்த மாடி வீடு குடும்ப சொத்திலிருந்து வந்த வருவாயிலிருந்து கட்டப்பட்டதாக வழக்குரையில் சொல்லியிருப்பது தவறானது என்றால் சரியல்ல. சோமசுந்தரம் பெயரில் உள்ள சொத்துகளிலிருந்து வருடத்துக்கு எவ்வளவு வருமானம் வரும் என்றும், குடும்ப செலவுகள் எவ்வளவு என்றும், குடும்ப செலவு போக மீதி எவ்வளவு என்றும் எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். தனராஜன் பெயரில் வாங்கப்பட்ட சொத்துக்கள் குடும்ப வருமானத்தில் இருந்து வாங்கப்பட்ட சொத்துக்கள் என்று எனது வழக்குரையில் சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கில் 1/7 பாகம் எனக்கு கிடைக்ககூடியது என்று நான் சொல்வது தவறு என்றாலும், நடராஜனின் பாகவீத சொத்துக்களில் 1/18 பாகவீதம் மட்டுமே எனக்கு கிடைக்ககூடியது என்று சொன்னால் சரியல்ல. தாவா 13 முதல்

21 ஐட்ட சொத்துகளில் எவ்வித பாகமும் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. 30 முதல் 32 ஐட்ட சொத்துசொத்துகளில் எவ்வித பாகமும் கிடைக்ககூடியது அல்ல என்றால் சரியல்ல. நான் வழக்குரையில் போட்டுள்ள ஆவணங்கள் அனைத்தும் வருவாய் துறை ஆவணங்கள் என்பதால் நான் பாகவீதம் கேட்கமுடியாது என்றால் சரியல்ல. நான் சில சொத்துக்களை விற்று வழக்கு போட்டுள்ளதாலும், உரிய தரப்பினரை சேர்க்காத காரணத்தாலும் இந்த வழக்கு பாதிப்படைந்துள்ளது என்றால் சரியல்ல. மேலும் சோமசுந்தர கவுண்டர் இறந்து சுமார் 20, 25 ஆண்டுகள் கழித்து இந்த வழக்கை போட்டுள்ளதால் இந்த வழக்கு காலவதியால் பாதிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. அதனால் நான் கேட்ட பரிகாரம் கிடைக்க கூடியது அல்ல என்றாலும், வழக்கை தள்ளுபடி செய்யவேண்டும் என்றாலும் சரியல்ல.